மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ.தலைமை! மு.பேச்சிபாண்டியன் வரவேற்பு!

# தமிழ்நாடு தலைகுனியாது! நெல்லை தொகுதி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் சிறப்புரை!



நெல்லை, மார்ச் 20-

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க சங்கர்நகர் நாராயணமாள்புரம் பேரூர் தி.மு.க சார்பில் "தமிழ்நாடு தலைகுனியாது" ஸ்டாலின் தொடரட்டும் தமிழ்நாடு வெல்லட்டும் திருநெல்வேலி சட்டமன்ற தொகுதியின் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் சங்கர்நகர் அமோகா பேலஸில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர், பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வஹாப் தலைமையில் நடைபெற்றது. தலைமை செயற் குழு உறுப்பினர் மு.பேச்சி பாண்டியன் வரவேற்புரையாற்றினார்.

இந்நிகழ்வில் முன்னாள் முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் பங்கேற்று பேசியதாவது:-

2021ஆம் ஆண்டு தேர்தல் பிரச்சாரத்தின் போது, "ஸ்டாலின் முதலமைச்சராக வர முடியாது" என அப்போதைய முதல்வர் எடப்பாடி பழனிசாமி சவால் விடுத்தார். ஆனால், அந்தச் சவாலை ஏற்று, உறுதியாக செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் அமர்வேன் எனக் கூறி மாபெரும் வெற்றியுடன் கழக தலைவர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். உணவு,உடை, இருப்பிடம் ஆகிய அடிப்படைத் தேவைகளை எந்தப் பாகுபாடும் இன்றி அனைத்து மக்களுக்கும் வழங்கும் வகையில் திட்டங்கள் செயல்படுத்தப் பட்டுள்ளன. இத்திட்டங்கள் அனைத்தும் வெறும் அறிமுகத்தோடு நிற்காமல், அடுத்த 50 முதல் 100 ஆண்டுகால சந்ததியினரும் பயன்பெறும் வகையிலான தொலை நோக்குடன் உருவாக்கப் பட்டுள்ளன. இத்திட்டங்களின் செயல்பாடுகளை முதலமைச்சர் அவர்கள் தினந்தோறும் நேரடியாக ஆய்வு செய்து வருகிறார்.தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியோர்களின் கொள்கை வழியில் ஒரு சிறப்பான 'திராவிட மாடல்' ஆட்சியை முதலமைச்சர் தளபதி அவர்கள் வழங்கி வருகிறார்.சாதி, மதப் பாகுபாடற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்குவதே இந்த ஆட்சியின் இலக்கு.

இந்தியாவிலேயே முதன் முறையாக விவசாயத்திற்கு என தனி பட்ஜெட் தாக்கல் செய்த பெருமை தமிழக அரசையே சாரும். தேசிய அளவில் 'இந்தியா கூட்டணி' என்ற ஒரு வலுவான கூட்டணியை உருவாக்கி, கட்சிகளுக்குச் சரியான முறையில் தொகுதிகளைப் பங்கிட்டு,நாடாளுமன்றத் தேர்தலில் 40க்கு 40 என்ற மகத்தான வெற்றியை முதலமைச்சர் தளபதி அவர்கள் பதிவு செய்துள்ளார்.

அதற்கு எதிராக தேசிய அளவில் ஒரு கூட்டணியை உருவாக்கியுள்ளார் கள்.அந்த கூட்டணி நிச்சயம் தோல்வியை தழுவும் நிலை உள்ளது. எனவே யாரையெல்லாமோ கூட்டணிக்கு அழைத்து பார்க்கிறார்கள்.ஆனால் தோல்வி பயத்தால் கூட்டணிக்கு வரமறுத்து ஓடி விடுகிறார்கள்.

விண்வெளியில் 9 கோள்கள் இருந்தாலும், அனைத்திற்கும் மையமாகவும்,அதிக சக்தி வாய்ந்த கோளாகவும் விளங்கு வது 'சூரியன்' மட்டுமே.எந்தக் காலத்திலும் சூரியனை யாராலும் வீழ்த்த முடியாது.எனவே, நாட்டை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லும் மகத்தான தலைவரான முதலமைச்சர் தளபதி அவர்களின் கரங்களை மேலும் வலுப்படுத்த, பெருவாரியான மக்கள் 'உதயசூரியன்' சின்னத்தில் வாக்களித்து அமோக வெற்றியைத் தேடித் தரவேண்டும் என்றார்.

இவ்வாறு முன்னாள் முதலமைச்சர் ஓ பன்னீர் செல்வம் பேசினார்.

கூட்டத்தில்முன்னாள் எம்பி ரவீந்திரநாத்,மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் மாலை ராஜா, மாவட்ட அவைத்தலைவர் முருகன் மாநில மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர் விஜிலா சத்தியானந்த், மாவட்ட துணை செயலாளர்கள் தர்மன்,கிரிஜாகுமார், மாநகர கிழக்கு பொறுப்பாளர் தினேஷ் ,மேயர் ராமகிருஷ்ணன், பகுதி பொறுப்பாளர்கள் சாமுவேல், துபாய் சாகுல் ஹமீது,டாக்டர் சங்கர், ஒன்றிய செயலாளர்கள் மாரியப்பன், அருள்மணி, அன்பழகன், பாளை மண்டல தலைவர் பிரான்சிஸ், மாவட்ட மருத்துவரணி அமைப்பாளர் டாக்டர் கே.எஸ்.ரவி, நாரண மாள் புரம் பேரூர் செயலாளர் பேச்சிகுட்டி உள்பட கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழகத் தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் சங்கர்நகர் இளைஞர் அணி அமைப்பாளர் மனோஜ்பிரபு,நாரணம்மாள்புரம் இளைஞரணி அமைப்பாளர் முத்து ராமலிங்கம் ஆகியோர் நன்றியுரையாற்றினர்.

தாழ்த்தப்பட்டோர் - பழங்குடியினர் வகுப்பிலிருந்து

# உயர்நீதி மன்றங்களில் எத்தனை நீதிபதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்?

## மக்களவையில் எஸ். ஜெகத்ரட்சகன் கேள்வி!



புதுடெல்லி, மார்ச் 20-

திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரக்கோணம், நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் 13 மார்ச்; 2026 அன்று மக்களவையில், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வகுப்பிலிருந்து எவ்வளவு நீதிபதிகள் உயர் நீதிமன்றங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்? என்றும், உச்ச நீதிமன்றத்தில் எவ்வளவு நீதிபதிகள் பணியில் உள்ளனர் என்றும் மாவட்ட நீதிமன்றங்களில் எவ்வளவு தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் நீதிபதிகளாக உள்ளனர் என்றும் நீதித்துறை அதிகாரிகள் நியமனத்தில் இட ஒதுக்கீடு கொள்கை பின்பற்றப்படுகிறதா? என்றும் இதன் விவரங்களை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா? என்றும். ஒன்றிய அரசின் நீதித்துறை அமைச்சர் அர்ஜுன்ராம் மேக்வால் அவர்களிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய அரசின் நீதித்துறை அமைச்சர் அளித்த பதில் பின்வருமாறு:

உயர்நீதி மன்றங்கள் மற்றும் உச்ச நீதிமன்ற நீதிபதிகள், அரசியல் சட்டப் பிரிவுகள் 124, 217 மற்றும் 224களின் படி நியமிக்கப்படுவதால், எந்த வகுப்பினருக்கும் இட ஒதுக்கீடு வழங்கப் படுவதில்லை என்றும், எனவே இதுகுறித்த விவரங்கள் ஒன்றிய அரசு வசம் இல்லை என்றும், ஆனால் 2018ஆம் ஆண்டு முதல் உயர்நீதி மன்ற நீதிபதிகளின் சமுதாய விவரங்கள் திரட்டப்படுகின்றன என்றும், அதன்படி 849 உயர்நீதி மன்ற நீதிபதிகளில், தாழ்த்தப்பட்டோர் வகுப்பிலிருந்து 17 நீதிபதிகளும் உள்ளனர்.

மேலும், உச்ச நீதிமன்ற நீதிபதிகளை நியமிக்கும் அதிகாரம் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியிடத்தில் உள்ளது என்றும், உயர்நீதி மன்ற நீதிபதிகளை நியமிக்கும் அதிகாரம் உயர்நீதி மன்ற தலைமை நீதிபதியிடத்தில் உள்ளது என்றும் ஆனால் ஒன்றிய அரசு அனைத்து தரப்பினரையும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கு வழிகாட்டு நெறிமுறைகளை வழங்கியுள்ளது.

மாவட்ட மற்றும் கீழமை நீதிமன்ற நீதிபதிகளை பொறுத்தவரையில் அரசியல் சட்டப்பிரிவு 235ன்படி அவர்களை நியமிக்கும் அதிகாரம் அந்தந்த மாநில உயர் நீதிமன்றத்திற்கே வழங்கப் பட்டுள்ளது என்றும், ஒன்றிய அரசின் மாண்புமிகு நீதித்துறை அமைச்சர் அர்ஜுன்ராம் மேக்வால் அவர்கள், மக்களவையில் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலை அளித்துள்ளார்.

பாசுமதி அரிசி தொடர்பான

# பாரபட்சமான நடைமுறையை நிறுத்த நடவடிக்கை என்ன?

## மக்களவையில் டி.எம்.கதிர்ஆனந்த் கேள்வி!



புதுடெல்லி, மார்ச் 20-

இந்திய ஒன்றிய அரசின் வர்த்தக மற்றும் தொழில் துறை அமைச்சகத்தால் அரிசி வகைகளை பாசுமதி மற்றும் பாசுமதி அல்லாத அரிசி என்று வகைப்படுத்தியுள்ளது குறித்து மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் D.M.கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

இது தொடர்பாக அவரது கேள்விகள் வருமாறு:-

வணிகம் மற்றும் வர்த்தக நடவடிக்கைகள் பொறுத்தவரை அனைத்து வகையான அரிசிகளையும் பாசுமதி அரிசி மற்றும் பாசுமதி அல்லாத அரிசி என அரசு வகைப்படுத்தியுள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள் மற்றும் காரணங்கள் தருக?

பாசுமதி அரிசியை விட இதர சிறப்பு வகை அரிசிகளை தரக்குறைவாகக் குறிப்பிடுவது ஒரு சார்பற்ற அணுகுமுறை மற்றும் அலட்சியத்தைக் காட்டவில்லையா? அப்படியானால் விவரங்கள் யாவை?

பாசுமதி அரிசியுடன் ஒப்பிடும்போது பிற சிறப்பு வகைகளின் தரம் குறைவாக உள்ளது என்பதற்கு அரசிடம் ஏதேனும் அறிவியல் ஆதாரம் உள்ளதா? அப்படியானால் அதன் விவரங்கள் தருக?

இதர சிறப்பு அரிசியை பாசுமதி அல்லாத அரிசியாக வகைப்படுத்தும் இந்த பாரபட்சமான நடைமுறையை நிறுத்த அரசு எடுத்த உரிய நடவடிக்கைகள் என்ன?

இவ்வாறு அவர் கேள்விகள் கேட்டிருந்தார்.

அதற்கு ஒன்றிய அரசின் வணிகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் ஜிதின் பிரசாத் எழுத்து பூர்வமாக அளித்த பதில் விவரம் கீழ்வருமாறு:

சர்வதேச தயாரிப்பு பெயரிடலாக செயல்படும் ஹார்மோனைஸ் சிஸ்டம் (எச்எஸ்) படி, அரிசி 4இலக்க அளவில் 10.06 என்ற கட்டணத் தலைப்பின் கீழ் வகைப்படுத்தப் பட்டுள்ளது, மேலும் 6இலக்க மட்டத்தில் நான்கு கட்டண துணைத் தலைப்புகளாக மேலும் துணை வகைப்படுத்தப்படுகிறது.

தேசிய அளவில், பல்வேறு காரணிகளின் அடிப்படையில், முதன்மையாக வர்த்தகம் மற்றும் வர்த்தகம் மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகளுக்காக, நாடுகள் தங்கள் தயாரிப்புகளை கட்டணப் பொருட்களாக மேலும் வகைப்படுத்துகின்றன.

இந்தியாவில், தயாரிப்புகள் சுங்க வரிச் சட்டம், 1975 இன் கீழ் அறிவிக்கப்பட்ட 8இலக்கங்களில் கட்டணப் பொருட்களாக வகைப் படுத்தப்பட்டுள்ளன.

பாசுமதி அரிசி என்பது பஞ்சாப், ஹரியானா, டெல்லி, இமாச்சலப் பிரதேசம், உத்தரகண்ட், ஜம்மு மற்றும் காஷ்மீரின் 3 மாவட்டங்கள் மற்றும் உத்தரப் பிரதேசத்தின் 30 மாவட்டங்கள் ஆகிய ஏழு மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களில் விளையும் நறுமண அரிசி வகையாகும். 202425 ஆம் ஆண்டில் 6.07 மில்லியன் டன் ஏற்றுமதி அளவுடன் 5.94 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புள்ள ஏற்றுமதியுடன், உலக சந்தையில் இதற்கு குறிப்பிடத்தக்க தேவை உள்ளது. பாசுமதியை மற்ற அரிசி வகைகளில் இருந்து வேறுபடுத்தும் வகையில், 2008ம் ஆண்டு அரசு, பாசுமதியாக வகைப் படுத்த தேவையான அரிசி வகைகளின் தரம் மற்றும் தகுதிகளை அறிவித்தது.

வர்த்தகத்தை மையமாகக் கொண்ட கொள்கை உருவாக்கத்தின் துல்லியமான பதிவை செயல்படுத்துவதற்கும், வணிகம் மற்றும் வணிகத்தின் வளர்ச்சிக்கு குறிப்பிட்ட தலையீடுகளை செயல்படுத்துவதற்கும், அரிசியின் பிற ஜிஐ வகைகள், அரிசிக்கான புதிய கட்டணப் பொருட்களை அரசு உருவாக்கியுள்ளது. இது நிதிச் சட்டம் 2025 மூலம் செயல்படுத்தப் பட்டது, மார்ச் 29, 2025 அன்று நிறைவேற்றப் பட்டது.

இந்த நடவடிக்கை மே 1, 2025 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது, மேலும் 15க்கும் மேற்பட்ட மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களில் வளர்க்கப்படும் பொருட்களின் புவியியல் குறியீடுகள் (பதிவு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 1999ன் கீழ் புவியியல் குறியீடுகள் பதிவேட்டால் வரையறுக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட 30 ஜிஐக்கும் மேற்பட்ட அரிசி வகைகளை உள்ளடக்கியது.

உலகின் முன்னணி அரிசி உற்பத்தியாளர்களில் இந்தியாவும் ஒன்றாகும், மேலும் கணிசமான எண்ணிக்கையிலான அரிசி வகைகளைக் கொண்டுள்ளது, மேலும் 30க்கும் மேற்பட்டவை இந்தியாவில் புவியியல் குறியீடாக (ஜிஐ) பாசுமதி அரிசியுடன் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஜிஐ வகை அரிசிக்கும் அதன் சொந்த தனித்தனி சுவை, உடல் பண்புகள், வாசனை மற்றும் சர்வதேச சந்தையில் அதற்கேற்ற தேவை உள்ளது. இந்தக் கோரிக்கையைத் தட்டி, இந்தியாவின் பல்வேறு அரிசி வகைகளின் ஏற்றுமதியை ஊக்குவிக்க, வேளாண்மை மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (APEDA) மூலம், சர்வதேச சந்தையில் அரிசி ஏற்றுமதியை மேம்படுத்துவதற்காக, வர்த்தகத் துறை பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

(i) உள்கட்டமைப்பு மேம்பாடு (ii) தர மேம்பாடு (iii) சந்தை மேம்பாடு. நிதி உதவி வழிகாட்டுதல்களின் விவரங்கள் APEDA இன் இணையதளமான www.apeda.gov.in இல் காணலாம்.

APEDA பாசுமதி அல்லாத அரிசி வகைகளை விவரிப்பதற்காக சர்வதேச அரிசி ஆராய்ச்சி நிறுவனத்துடன் (IRRI) ஆராய்ச்சியை ஆதரித்துள்ளது மற்றும் சர்வதேச கண்காட்சிகள், வாங்குபவர்விற்பனையாளர் சந்திப்புகள் மற்றும் இலக்கு சந்தையின் மூலம் GI மற்றும் சிறப்பு அரிசியை மேம்படுத்துகிறது.

இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறினார்..

கச்சா எண்ணெய் உற்பத்தியை அதிகரிக்க

# ஒன்றிய அரசிடம் ஏதேனும் சிறப்புத் திட்டங்கள் உள்ளனவா?

## மாநிலங்களவையில் எஸ்.ஆர்.சிவலிங்கம் கேள்வி!



புதுடெல்லி, மார்ச் 20-

திராவிட முன்னேற்றக் கழக, மேலவை உறுப்பினர், எஸ். ஆர். சிவலிங்கம் அவர்கள் 16 மார்ச் 2026 அன்று மாநிலங்களவையில், கச்சா எண்ணெய் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் ஒன்றிய அரசிடம் ஏதேனும் சிறப்புத் திட்டங்கள் பரிசீலனையில் உள்ளதா? என்றும், பெட்ரோலியம் மற்றும் இயற்கை வாயு விதிகள் 2025ன் படி அகழாய்வு முதலீட்டை பெருக்க, ஒன்றிய அரசு முயற்சி எடுக்குமா? என்றும், இயற்கை வாயு விநியோகத்தை அதிகப்படுத்த அரசின் கட்டமைப்புகளை அதிகப்படுத்தும் முயற்சிகளை மேற்கொள்ள இயலுமா? என்றும் ஒன்றிய அரசின் பெட்ரோலியத்துறை இணையமைச்சர் சுரேஷ் கோபி அவர்களிடம் கேள்வி எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய அரசின் பெட்ரோலியத்துறை இணையமைச்சர் அவர்கள் அளித்த பதில் வருமாறு:-

உற்பத்தி குறைந்து வரும் கச்சா எண்ணெய் வளத்தை அதிக்படுத்தும் வகையிலும் 100 சதவீத வெளிநாட்டு முதலீட்டினை ஈர்க்கும் வகையிலும், எண்ணெய் மற்றும் இயற்கை வாயுக் கழகத்துடன்(ஓஎன்ஜிசி) இணைந்து பிரிட்டிஷ் பெட்ரோலியம் நிறுவனத்தின் உதவியுடன், கச்சா எண்ணெய் உற்பத்தியை அதிகரிக்க, ஒன்றிய அரசு தேவையான அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறது என்றும், எண்ணெய் அகழாய்வு துறையில் முதலீட்டை அதிகரிக்கும் வகையில் பெட்ரோலியம் மற்றும் இயற்கை வாயு 2025 கடந்த டிசம்பர் மாதம் முதல் அமலுக்கு வந்துள்ளது.

பெட்ரோலியம் மற்றும் இயற்கை வாயு விதிகள் 2025ன் படி 180 நாட்களுக்கும் தேவையான அனுமதிகள் தனியார் துறைக்கு வழங்கப்படும் என்றும் 30 ஆண்டுகால பெட்ரோலிய குத்தகைக்கு வழங்க வகை செய்யப்பட்டுள்ளது என்றும், இதற்கு தேவையான சட்ட சீர் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும் 25,929 கிலோ மீட்டர்கள் அளவிற்கு குழாய்கள் மூலம் இயற்கை எரி வாயு வழங்கப்படுகிறது என்றும்,

இதற்கான கட்டமைப்பில் 8,616 சிஎன்ஜி நிலையங்களும் 1,62,00,000 பெட்ரோலியம் நிலையங்களும் அமைக்கப்பட்டு விநியோகம் நாடு முழுவதும் சீராக கிடைக்க வசதி செய்யப்பட்டுள்ளது என்றும்,

வடகிழக்கு மாநிலங்களில் 4,670 கிலோ மிட்டர்கள் அளவிற்கு எரிவாயுக் குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளன என்றும், ஒன்றிய அரசின் பெட்ரோலியத் துறை இணையமைச்சர் சுரேஷ் கோபி அவர்கள் மாநிலங்களவையில் தி.மு.க. மேலவை உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம் எழுப்பிய கேள்விக்கு பதிலை அளித்துள்ளார்.

# வேலூர் வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம்!

## மாவட்ட பொறுப்பாளர் - நாடாளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த் சிறப்புரை !

வேலூர், மார்ச் 20-

வேலூர் வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் மாவட்ட பொருளாளர் சி.நரசிம்மன் தலைமையில் நடந்தது.

மாவட்ட பொறுப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர்ஆனந்த் சிறப்புரை ஆற்றினார்.

கூட்டத்தில் தமிழ் நாடு தலைகுனியாது பரப்புரை முன்னெடுப்பைவெற்றிகரமாக மேற்கொள்வது, 200தொகுதிகளுக்கும்மேலான வெற்றியை பெற வேண்டும் என்ற தலைவர் ஸ்டாலின் உத்தரவை மனதில்கொண்டு காட்பாடி, மற்றும் கே.வி.குப்பம் தொகுதிகளில் இமாலய வெற்றியை அடையவேண்டிய களப்பணி கள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

நிகழ்ச்சியில் கே.வி.குப்பம் தொகுதி பொறுப்பாளர் மதுசூதனன், மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, பகுதி, பேரூர் செயலாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி மாவட்டம் புதூர் ஊராட்சி ஒன்றியம் என். வேடப்பட்டி கிராமத்தில் நபார்டு திட்டத்தின் கீழ் ரூ 54 லட்சம் மதிப்பீட்டில் சாலை அமைக்கும் பணியினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி. மார்க்கண்டேயன் துவக்கி வைத்தார். நிகழ்வில் ஒன்றிய செயலாளர்கள் ராதாகிருஷ்ணன், மும்மூர்த்தி, செல்வராஜ், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



வேலூர் வடக்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழு கூட்டத்தில் மாவட்டக் கழக பொறுப்பாளர், நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் சிறப்புரை ஆற்றினார். உடன் மாவட்டப் பொருளாளர் சி.நரசிம்மன் மற்றும் கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.